இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை– 2008/2009
மட்டம் - 5
**LWU 3311/4311/4335** – நிருவாகச் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

053

திகதி: 28.03.2009 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

1. 'நிருவாகச் சட்டம் பற்றி எண்ணும் போது, நல்லதொரு ஆரம்ப புள்ளியாக சில மதிப்பை(அல்லது இலட்சியத்தை) மேம்படுத்துதல் அதன் நோக்கங்களில் ஒன்றாகும் அதாவது ஆளுநர்கள் தமது கடமைகளை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் மற்றும் அரச செயற்பாடுகளுடன் தொடர்புபடும் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றிய வழியை காட்டுதல் என கூறுவது நியாயம்போல் தோன்றும் கருத்தாகும்.'

   *Principles of Administrative Law, Peter Cane & Leghton McDonald. At page 313.*

   தமது கடமைகளை நிறைவேற்றும் போது பொது அதிகாரிகளின் நடத்தையை ஒழுங்குபடுத்தும் நிருவாகச்சட்டதின் சில முனைப்பான கொள்கைகளின் பின்னணியில் மேற்தரப்பட்ட கூற்றை ஆராய்க.

2. மனிதன் வசிப்பதற்கு பொருத்தமற்றது எனும் அடிப்படையில் 'எம் லாண்ட்' எனும் நகரசபையானது கொல்வினின் வீட்டை மூடும்படி கட்டளை ஒன்றை ஆக்கியது. நகரசபை சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டது போல கொல்வின் கட்டளைக்கெதிராக அரச உள்ளூராட்சி சபைக்கு மேன்முறையீடு ஒன்றை செய்தான். சபையானது விசாரணை ஒன்றை நடாத்தியதுடன் முறைப்பாட்டை தள்ளுபடி செய்தது. இயற்கை நீதிக் கொள்கையைக் கருத்தில் கொள்ளாது நகர சபையானது மூடுவதற்கான கட்டளையை பிறப்பித்தமை தொடர்பான விடயங்களை தான் அரச உள்ளூராட்சி சபையின் கவனத்திற்கு கொண்டு வந்ததாகவும், அதில் மூடுவதற்கான கட்டளையை பிறப்பிக்க சிபாரிசு செய்த நகரசபை அதிகாரிக்கு முன்னால் தான் தோன்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டமை மற்றும் வீட்டின் பரிசோதனையை மேற்கொண்ட நகரசபை பரிசோதகரால் நடாத்தப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணையின் அறிக்கையை கவனத்துடன் பார்ப்பதற்கு தனக்கு அனுமதி மறுக்கப்பட்டமை என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன எனவும் கொல்வின் உமக்கு கூறுகின்றார்.

   மேலும் அவர் கூறுகையில் நகரசபையின் அனைத்து 25 அங்கத்தவர்களையும் செயலாளர், அதேபோல பரிசோதகர் ஆகியோரை அரச உள்ளூராட்சி சபையின் விசாரணைக்காக வரும்படி அழைப்பாணை விடுப்பதற்கு தனக்கு அனுமதி வழங்கும்படி அவர் அரச உள்ளூராட்சி சபைக்கு வேண்டுகோள் விடுத்ததாகவும் கூறுகிறார். அவ் அரச உள்ளூராட்சி சபையானது நகர சபைத்தலைவரையும் செயலாளரையும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கியது ஆனால் ஏனைய அங்கத்தவர்களையோ, பரிசோதகரையோ அழைக்கவோ அல்லது குறுக்கு விசாரணை செய்யவோ மறுத்தது. மேலும் நகரசபைத்தலைவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் அரச உள்ளூராட்சி சபை அங்கத்தவர் என்பதால் அரச உள்ளூராட்சி சபையின் தீர்மானமானது நகரசபைத்தலைவரின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகும் என தான் நியாயமான சந்தேகம் கொண்டிருப்பதாக கொல்வின் குற்றஞ்சாட்டுகிறார். மேலும் தனது மேன்முறையீட்டை நடத்துவதற்கு வழக்கறிஞர் ஒருவரை அமர்த்துவதற்கான தனது கோரிக்கையும் அரச உள்ளூராட்சி சபையால் மறுக்கப்பட்டுள்ளது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச உள்ளூராட்சி சபையின் தீர்மானத்தின் வலிதுடமையை கேள்விக்குட்படுத்த கொல்வின் விரும்புகிறார்.

எதனடிப்படையில் அதனை வெற்றிகரமாக கேள்விக்குட்படுத்தலாம் என அவருக்கு அறிவுரை செய்க. உமது விடையை தொடர்புடைய வழக்குகளுடன் ஆராய்ந்து ஆதாரப்படுத்துக.

3. 'நீதிமுறை மீளாய்வானது, ஒரு தீர்மானத்தின் மேன்முறையீட்டில் இருந்து வருவதல்ல, ஆனால் ஒரு தீர்மானம் என்ன முறையில் மேற்கொள்ளப்பட்டது என்பதை மீளாய்வதாகும் என அடிக்கடி கூறப்படுகிறது."

*Chief constable of North Wales Police V. Evans* [1982] 3 All E R 141, 155

மேற்தரப்பட்ட கூற்றின் பின்னணியில் நிருவாக தற்துணிபதிகாரத்தின் மீதான நீதித்துறை கட்டுப்பாடுக்கு எதிர்எதிரான நீதிமுறை மீளாய்விற்கான அரசியலமைப்படிப்படை என்பவற்றை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி விமர்சித்து பகுப்பாய்வு செய்க.

4. 'பதிவேட்டின் முகத்தோற்றத்தில் சட்டப்பிழை எனும் கோட்பாட்டை அனிஸ்மினிக் எனும் வழக்கானது வலுவிகழ்தல் கொள்கைக்குள் கொண்டுவந்துள்ளது.'

இக் கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

5. திரையரங்குகளை நடத்துவதற்கான உரிமத்தை வழங்குவதற்கும் மீளப்பெறுவதற்குமான அதிகாரம் X நகரசபைத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் உரிமம் வழங்குவதற்கு தேவையான பொருத்தமான நியதிகளையும் நிபந்தனைகளையும் விதிப்பதற்கு அவர் அதிகாரப்படுத்தப்பட்டிருந்தார். சில மாதங்களுக்கு முன்னர் ஸ்டார்லைன் திரையரங்கிற்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

திரையரங்கானது பெண்கள் பாடசாலைக்கு அருகில் அமைக்கப்பட்டிருப்பதால் நாட்பொழுதில் திரைப்படம் பாரப்பதற்கு செல்லும் மக்களால் பாடசாலைக்கு இடையூறு ஏற்படுவதாக அயல் மக்கள் தற்போது முறைப்பாடு செய்கின்றனர். திரையரங்கானது பூரணை தினம் மற்றும் பொது விடுமுறை நாட்களிலும் திறந்திருப்பதோடு வயது வந்தவர்களுக்கான படங்களுக்கு சிறுவர்களும் அனுமதிக்கப்படுவதாக அவர்கள் மேலும் முறைப்பாடு செய்கின்றனர். மக்கள் நகரசபைத்தலைவருக்கு எழுத்துமூலம் விண்ணப்பத்தை மேற்கொண்ட போதிலும் நான்கு மாத காலத்திற்கு அதிகமாகியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்கெதிராக எதன் அடிப்படையில் எந்த நிவாரனத்தை தாம் நாடலாம் என மக்கள் உமது அறிவுரையை வேண்டுகின்றனர். அவர்களுக்கு அறிவுரை செய்க.

6. "விளம்பல் தீர்ப்பானது, நிருவாக அதிகாரிகளுக்கு எதிராக தற்போது பெறக்கூடியதாக விருக்கும் எங்கும் நிறைந்திருக்கும் ஆனால் அநேகமாக பொதுவில் மிக பயனுடைய நிவாரணங்களில் ஒன்றாகும்."

*Law in the Changing Society - friedmann*..(19 ) *p.*

இலங்கையின் நிருவாக நடவடிக்கையுடன் தொடர்புடைய விளம்பல் கட்டளையை பிறப்பிப்பது தொடர்பான சர்க்கைக்குரிய நியாயாதிக்கப் பிரச்சனையுடன் ஆதாரப்படுத்தி இக் கூற்றை ஆராய்க.

7. 'விவசாய நிலங்களை சுவீகரிக்க காணி மீட்புச்சட்டத்தின் கீழ் காணி ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2 ஏக்கர் வயல் நிலம், 150 தென்னை மரங்கள், ஒரு கிணறு, வசிக்கும் வீடு ஆகியவற்றை உள்ளடங்கிய டேவிட்சனின் காணியை அவர் சுவீகரித்தார். கட்டளைச்சட்டத்தின் கீழ் விவசாய நிலம் எனும் வரைவிலக்கணத்தினுள் அது உள்ளக்கப்படமாட்டாது என்பதால் ஆணையாளருக்கு அதனை சுவீகரிப்பதற்கு அதிகாரம் இல்லை என டேவிட்சன் குற்றஞ்சாட்டுகிறார்.

மேலும், ஆணையாளரின் மகனும் டேவிட்சனின் மருமகனும் தமது வியாபார நடவடிக்கைகளில் நல்ல உறவில் இல்லை என்பதால் இந் நடவடிக்கையானது தனிப்பட்ட பழிவாங்குதல் என அவர் கூறுகிறார். ஆணையாளரின் தீர்மானத்தை எதனடிப்படையில் வெற்றிகரமாக கேள்விக்குட்படுத்தலாம் என அவர் உமது அறிவுரையை நாடுகின்றார்.

அவருக்கு அறிவுரை செய்க.

8. 'கையளிக்கப்பட்ட சட்டவாக்கம் தொடர்பான தரமான தர்க்கம் என்னவென்றால் சிறிய விடயங்களை விடரமாக பாராளுமன்றத்தால் கவனிக்க முடியாத போது அது அவசியமாகின்ற தென்பதாகும். ஆனால் அவசரகால அதிகாரங்களுக்கப்பால், பாராளுமன்றமானது சில வேளைகளில் சட்டமாக்கும் அதிகாரங்களை கையளிக்கின்றது என்பது பொதுவானதாகும்.

*Administrative Law 7th Edition : H.W.R. WADE & C.F. FORSYTH p. 862*

கையளிக்கப்பட்ட சட்டவாக்கத்தை ஆக்குவதற்கான காரணத்தை நியாயப்படுத்தி அல்லது மேற்தரப்பட்ட கூற்றை விமர்சித்து பரிசீலனை செய்க.

(பதிப்புரிமையுடையது)